ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ ஆகஸ்ட். 11, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 308 ❖ ரூ.10

## வேலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி வசந்த லீலா பிறப்பித்த உத்தரவில் மாறுபாடு

# அதிருப்தி

## அமைச்சர் பொன்முடி மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் மிக மோசமான முறையில் விசாரணை; சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தாமாக முன்வந்து மறு ஆய்வு மனுவை விசாரணைக்கு எடுத்தார்.

**சென்னை, ஆக. 11–**

**அமைச்சர் பொன்முடிக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில், வேலூர் நீதிமன்றத்தில் மிக மோசமான முறையில் விசாரணை நடந்துள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.**



கடந்த 1996-ம் ஆண்டு முதல் 2001-ம் ஆண்டு வரை திமுக ஆட்சியில் இருந்தபோது, போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தவர் பொன்முடி. வருமானத்துக்கு அதிகமாக ஒரு கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பில் சொத்து சேர்த்ததாக அவர் மீதும், அவரது மனைவி விசாலாட்சி மீதும் லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் துணை காவல் கண்காணிப்பாளர் வழக்குப் பதிவு செய்தார். 1996 மே 13 முதல் 2002 மார்ச் 31 வரையிலான நாட்களை லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை காலமாக எடுத்துக்கொண்டு, 2002 மார்ச் 14-ம் தேதி வழக்குப் பதிவு செய்தது.

விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கு வேலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. இதில் 172 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு, வாதங்கள் நிறைவடைந்த நிலையில், கடந்த ஜூன் 28-ம் தேதி நீதிபதி வசந்த லீலா பிறப்பித்த உத்தரவில், 'பொன்முடி மற்றும் அவரது மனைவி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. போதிய ஆதாரங்களும் இல்லை' எனக் கூறி இருவரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார். இந்த தீர்ப்பை எதிர்த்து லஞ்ச ஒழிப்பு துறை தரப்பில் இதுவரை சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படவில்லை.

இந்த நிலையில், குற்ற விசாரணை சட்டம் 391-வது பிரிவின்படி, விசாரணை நீதிமன்றங்களின் முடிவுகளை ஆய்வு செய்ய வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தாமாக முன்வந்து மறு ஆய்வு மனுவை விசாரணைக்கு எடுத்தார்.

இந்த வழக்கை நேற்று விசாரித்த நீதிபதி, "இந்த வழக்கை ஏன் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளேன் என்பது குறித்து 17 பக்க உத்தரவை பிறப்பித்துள்ளேன். இதுவரை நான் பார்த்ததில், மிக மோசமான முறையில் விசாரிக்கப்பட்டதால்தான் இந்த வழக்கை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளேன். எனவே, இந்த மனு தொடர்பாக, லஞ்ச ஒழிப்புத் துறை, அமைச்சர் பொன்முடி, அவரது மனைவி விசாலாட்சி ஆகியோர் பதிலளிக்க உத்தரவிடுகிறேன் என்று வழக்கின் விசாரணையை செப்டம்பர் 7-ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



▸ தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள பள்ளிக்கல்வித் துறையின் பேராசிரியர் க. அன்பழகன் கல்வி வளாகத்தில், புதிதாக நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் க. அன்பழகனின் திருவருவச் சிலையை திறந்து வைத்து, அச்சிலை அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மவர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், சென்னை மாநகராட்சி மேயர், பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 2024லிலும் மக்கள் உங்களை தூங்கவிடப் போவதில்லை பிரதமர் மோடி சாடல்

**புதுடெல்லி , ஆக. 11–**

**எதிர்க்கட்சிகளுக்கு ஏழைகளின் பசி குறித்து கவலை இல்லை என்றும், அதிகாரப் பசிதான் அவர்களின் மனதில் உள்ளது என்றும் மக்களவையில் பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துப் பேசினார்.**



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த ஜூலை 20-ம் தேதி தொடங்கியது. மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடி அறிக்கை தாக்கல் செய்ய வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வந்தனர். இதற்கிடையே, மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணி சார்பில் மக்களவையில் நம்பிக்கை இல்லா தீர்மான நோட்டீஸ் வழங்கினர். இந்த தீர்மானத்தின் மீதான விவாதம் செவ்வாய் தொடங்கியது. 2-ம் நாளாக புதனும் விவாதம் தொடர்ந்தது. இதில் காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, கம்யூனிஸ்ட், சமாஜ்வாதி, என்சிபி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பேசினர். இதற்கு பதில் அளித்து மத்திய அமைச்சர்கள், பாஜக எம்.பி.க்கள் பேசினர்.

இந்நிலையில், மூன்றாவது நாளான நேற்று நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீதான விவாதங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி பதிலளித்து பேசியது: "எங்கள் அரசு மீதான நம்பிக்கையை நாட்டு மக்கள் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்துகிறார்கள். கோடிக்கணக்கான நாட்டு மக்களுக்கு நன்றி கூறவே நான் இப்போது இங்கே இருக்கிறேன். கடவுள் மிகவும் அன்பானவர். அவர் சில ஊடகங்கள் மூலம் பேசுகிறார். கடந்த 2018-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது நான் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டேன். 'இந்தச் சோதனை எங்களுக்கானது அல்ல; எதிர்க்கட்சிகளுக்கானது' என்று. இறுதியில், அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் தோல்வியை சந்தித்தார்கள்.

அந்த வகையில், நம்பிக்கையில்லா தீர்மானம் என்பது எப்போதுமே எங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தரக்கூடியது. வரக்கூடிய 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியும் பாஜகவும் முன் எப்போதும் இல்லாத அளவு மிகப் பெரிய வெற்றியை மக்களின் ஆசிர்வாதத்தோடு பெற வேண்டும் என்பதாக நீங்கள் (எதிர்க்கட்சிகள்) முடிவெடுத்துவிட்டீர்கள். நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சிகள் எத்தகைய விவாதத்தை மேற்கொண்டன? நீங்கள் பேசியதை நான் சமூக ஊடகங்களில் பார்த்தேன். நமது நோக்கம் நாட்டின் வளர்ச்சி குறித்ததாக இருக்க வேண்டும். அதுதான் தற்போதைய தேவை. கனவை நனவாக்கும் சக்தியை நமது இளைஞர்கள் பெற்றிருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு ஊழலற்ற அரசையும், விருப்பங்களையும், வாய்ப்புகளையும் கொடுத்திருக்கிறோம். நாட்டின் நம்பிக்கையை மிகப் பெரிய உயரத்துக்கு நாங்கள் கொண்டு சென்றிருக்கிறோம். ஆனால், உலகின் முன் நாட்டின் மதிப்பை சீர்குலைக்க சிலர் முயல்கிறார்கள். ஆனாலும், இந்தியாவின் நம்பிக்கை உலக அளவில் உயர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பான சில விஷயங்கள் இதுவரை கேள்விப்பட்டிராத, கற்பனையில் கூட நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு விசித்திரமானவை. நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது பேசக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களின் பெயர் பட்டியலில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரியின் பெயர் இல்லை. அவர் பேசுவதற்கு அவரது கட்சி அவருக்கு வாய்ப்பு வழங்கவில்லை. ஆனால், நீங்கள் (சபாநாயகர்) பெருந்தன்மையுடன் பேசுவதற்கான அவரது நேரம் முடிந்த பிறகும் அவர் பேச அனுமதித்தீர்கள். ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஏன் ஓரம் கட்டினார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை கொல்கத்தாவில் இருந்து தொலைபேசி வந்திருக்கலாம். காங்கிரஸ் கட்சி அவரை மீண்டும் மீண்டும் அவமதிக்கிறது. சில கட்சிகள் தங்கள் நடத்தையின் மூலம் நாட்டைவிட தங்கள் கட்சியே பெரியது என்ற எண்ணத்தை வெளிப்படுத்தி இருக்கின்றன. உங்களுக்கு ஏழைகளின் பசி குறித்து கவலை கிடையாது; அதிகாரப் பசிதான் உங்கள் மனங்களில் உள்ளது. இலங்கை எரிந்தது அனுமனால் அல்ல ராவணனின் அகந்தையால் என்பது உண்மைதான். அதோடு, மக்கள் ராமரை விரும்புகிறார்கள். அதனால்தான், உங்களுக்கு (காங்கிரஸ் கட்சிக்கு) நாடாளுமன்றத்தில் இருந்த பலத்தை 400ல் இருந்து 40 ஆக குறைத்திருக்கிறார்கள். எங்கள் அரசை மக்கள் இரண்டுமுறை தொடர்ச்சியாக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால், ஒரு ஏழை மனிதன் எப்படி பிரதமராக இருக்கலாம் என்ற உங்களின் எண்ணம் உங்களை தூங்கவிடாமல் செய்து வருகிறது. 2024லும் மக்கள் உங்களை தூங்கவிடப்போவதில்லை. என்றார்.

## தேர்தல் ஆணைய நியமனங்களுக்கான

## புதிய மசோதா உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி 'தவிர்ப்பு'க்கு காங்கிரஸ் எதிர்ப்பு

புதுடெல்லி , ஆக. 11–

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களின் பெயர்களை பரிந்துரைக்கும் மூவர் குழுவில் இருந்து உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கும் மத்திய அரசின் மசோதாவுக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை, பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய மூவர் குழு தேர்வு செய்ய வேண்டும் என்று நீதிபதி கே.எம். ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு கடந்த மார்ச் மாதம் தீர்ப்பளித்தது. மேலும், நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் வரை இந்த விதிமுறை தொடரும் என்றும் ஒருமனதாக தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு மாற்றாக கேபினெட் அமைச்சர் ஒருவர் தேர்வுக் குழுவில் இடம் பெறுவதற்கு ஏற்ப மத்திய அரசு மசோதா ஒன்றை தயாரித்துள்ளது. அந்த மசோதா மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு ஏற்ப பட்டியலிடப்பட்டுள்ளது. இந்நிலையில், மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் கருத்து பதிவிட்டுள்ள காங்கிரஸ் அமைப்பு பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், "தேர்தல் ஆணையத்தை பிரதமரின் கைப்பாவையாக மாற்றும் அப்பட்டமான முயற்சி இது. பாரபட்சமற்ற குழு தேவை என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இனி என்னாகும்? ஒரு சார்புடைய தேர்தல் ஆணையரை நியமிக்க வேண்டும் என்று பிரதமர் ஏன் நினைக்கிறார்? இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமான, தன்னிச்சையான, நியாயமற்ற மசோதா. மக்களவை மற்றும் மாநிலங்களவை என இரண்டிலும் இதை நாங்கள் எதிர்ப்போம்" என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் இந்த மசோதாவைக் கொண்டு வந்து தேர்தல் ஆணையத்தைக் கட்டுப்படுத்த நினைப்பதாக காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "மோடியும் அமித் ஷாவும் இப்போது செய்வது போல் தேர்தல் ஆணையத்தை கட்டுப்படுத்த விரும்புகிறார்கள். அனைத்து ஜனநாயக சக்திகளும் இதனை எதிர்க்கவேண்டும். பிஜு ஜனதா தளம் மற்றும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி ஆகியவையும் இதை எதிர்க்கவேண்டும். அவை செய்யுமா?" என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

தேர்தல் ஆணையர் அனுப் சந்திர பாண்டே அடுத்த ஆண்டு பிப்ரவரி 14ம் தேதி ஓய்வு பெற இருக்கிறார். அதையடுத்து, தேர்தல் ஆணையர் குழுவில் ஒரு காலியிடம் ஏற்படும். இந்த மசோதா நிறைவேற்றப்படுமானால், புதிய தேர்வுக் குழுவே புதிய தேர்தல் ஆணையரை தேர்வு செய்து குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைக்கும். உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு முன், மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காரைக்கால் மாவட்டத்தில் உள்ள பள்ளி ,கல்லூரி மாணவர்களுக்கு குடல் புழு மாத்திரைகள் வழங்கும் பணி தொடங்கியது

காரைக்கால் , ஆக. 11–

புதுச்சேரி அரசின் நலவழித்துறை காரைக்கால் மாவட்ட சுகாதார இயக்கத்தின் சார்பில் 1 முதல் 19 வயதுக்குட்பட்ட பள்ளி,கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு குடல்புழு நீக்கும் மாத்திரைகள் முதல் கட்டமாக கடந்த பிப்ரவரி மாதம் வழங்கப்பட்டது.



இத்திட்டத்தின் 2-ஆம் கட்டமாக மாத்திரைகள் வழங்கும் நிகழ்ச்சி நெடுங்காடு ஜவர்ஹலால்நேரு அரசு மேல்நிலை பள்ளியில் நேற்று நடைப்பெற்றது. போக்குவரத்து துறை அமைச்சர் சந்திரப்ரியாங்கா தலைமையிலும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோந்துங்கன் முன்னிலையிலும் மாணவ மாணவியர்களுக்கு மாத்திரைகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ்குமார் கலந்துக்கொண்டு குடல் புழுவினால் ஏற்படும் தீமைகள் பற்றி எடுத்துக் கூரினார். மேலும் நேற்று விடுபட்டவர்களுக்குவரும் 17-ஆம் தேதி மாத்திரைகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிகல்வித்துறைதுணை இயக்குனர் ராஜேஸ்வரி நோய்த்தடுப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.தேனாம்பிகை, மருத்துவ அதிகாரி டாக்டர் லாவான்யா பள்ளியின் துணை முதல்வர் அசோகன் மற்றும் ஆசிரியர்கள் நலவழித்துறை ஊழியர்கள் கலந்துக்கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை நலவழித்துறை பொதுசுகாதார செவிலிய அதிகாரி மகேஸ்வரி நோய்த்தடுப்பு திட்ட தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர், பெண்சுகாதார மேற்பார்வையாளர் எழிலரசி, சுகாதார ஆய்வாளர் வெங்கடேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

# இன்று

# 11-8-2023

மணத்தக்காளி கீரை சாப்பிட்டால் குடல் புண் குணமாகும்.
சக வருடம் 1945 சிராவணம் 20

| சோபகிருது ஆடி 26 | AUG - FRI வெள்ளி | முஹர்ரம் 23 | தேய்பிறை 223 / 142 |
|---|---|---|---|

தேய். தசமி 07.33 (கா. 09.05) ரோகிணி 05.58 (கா. 08.27) தியாஜ் 20.48 அகஸ் 30.57 மரண 05.58 மேல் சித்த. திருமாலிருஞ்சோலை மூலவர் சுந்தரராஜப் பெருமாள் தேவியர்களுடன் விசுவரூப அலங்காரத்தில் காட்சி. காவல் தெய்வம் பதினெட்டாம்படி கருப்பண்ண சாமிக்கு சிறப்பு அபிஷேகம்.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 12.15-1.15 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; கடக லக்னம் இருப்பு நா. 1 வி. 12; சந்திராஷ்டமம் விசாகம்
கரணம் : 1.30-3; சூரிய உதயம் : 6.04
எறும்பு ஊர கல்லும் தேயும்

**இராசிபலன்**
மேஷம் - உற்சாகம்
ரிஷபம் - போட்டி
மிதுனம் - சாந்தம்
கடகம் - ஓய்வு
சிம்மம் - ஆதாயம்
கன்னி - நட்பு
துலாம் - இழப்பு
விருச்சி - செலவு
தனுசு - கவலை
மகரம் - பெருமை
கும்பம் - எதிர்ப்பு
மீனம் - பயம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# சட்டத்துறை அமைச்சர் ரகுபதி மீதான போராட்ட வழக்கை ரத்து செய்தது உயர் நீதிமன்றம்

மதுரை ,ஆக11-

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி அனுமதி பெறாமல் போராட்டம் நடத்தியதாக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி மற்றும் திமுகவினர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பேருந்து நிலையத்தில் 5.4.2018-ல் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்து தற்போதைய தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தலைமையில் திமுகவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இது தொடர்பாக அனுமதி பெறாமல் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக அமைச்சர் ரகுபதி உட்பட 5 பேர் மீது பொன்னமராவதி போலீஸார் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி 5 பேரும் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு எம்பி, எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர் பி. கணபதி சுப்பிரமணியன் வாதிட்டார். விசாரணைக்கு பிறகு அமைச்சர் ரகுபதி உள்ளிட்ட 5 பேர் மீதான வழக்கை ரத்து செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

# பிலிக்கல்பாளையம் அருகே மோட்டார் சைக்கிள் மோதி பெண் பலி

பரமத்திவேலூர் ,ஆக11-

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா பிலிக்கல்பாளையம் அருகே உள்ள சேளூர் கந்தம்பாளையத்தை சேர்ந்தவர் சின்னசாமி. கூலித்தொழிலாளி. இவரது மனைவி மல்லிகா(54). இவர் சேளூர் சாணார்பாளையம் பகுதியில் சம்பவத்தன்று சாலையில் நடந்து சென்றார். அப்போது பின்னால் அதி வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மல்லிகா தலையில் பலத்த காயமடைந்து உயிருக்கு போராடினார். அதை பார்த்த அவ்வழியாக சென்றவர்கள் உடனடியாக ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அவரை காப்பாற்றி பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக நாமக்கல்லில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் மல்லிகா சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதுகுறித்து பரமத்திவேலூர் போலீசில் புகார் செய்தனர். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து பிரேதத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து மல்லிகாமீது மோதி விபத்தை ஏற்படுத்திய சேளூர் சாணார்பாளையத்தைச் சேர்ந்த தங்கவேல் (65) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




பெரியபாளையம் ஆடித்திருவிழாவை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் சார்பில்

# உற்பத்தி பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது





ஊத்துக்கோட்டை, ஆக11-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் ஆடித்திருவிழா நடைபெற்று வருகிறது. இந்நிலையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் இம்மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சி இன்று முதல் 16-ம் தேதி வரையில் பெரியபாளையத்தில் உள்ள சுற்றுலாதுறை வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்த விற்பனை மற்றும் கண்காட்சி மையத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, தண்டலம் ஊராட்சிமன்ற தலைவர் புவனேஸ்வரிரவி தலைமை தாங்கினார். மாவட்ட உதவி திட்ட அலுவலர் ராமதாஸ் முன்னிலை வகித்தார். இதில், சிறப்பு அழைப்பாளராக மாவட்ட திட்ட இயக்குனர் மலர்விழி கலந்து கொண்டு விற்பனை மற்றும் கண்காட்சி மையத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதன்பின்னர், கண்காட்சியை பார்வையிட்டு மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனையை மேம்படுத்த பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில், ஏராளமான மகளிர் சுய உதவிக்குழுவினர் கடைகளை அமைத்திருந்தனர். இந்நிகழ்ச்சியில், எல்லாபுரம் வட்டார இயக்க மேலாண்மை அலகு நிர்வாகிகள் அபிராமி, நாகராஜ், உஷாராணி, மாலா, ஜெயசித்ரா, வனிதா, உமாவதி, காஞ்சனா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# "சிலப்பதிகாரம் குறிப்பிடுவது 'தமிழர்கள்'தான், 'திராவிடர்கள்' அல்ல" மக்களவையில் நிர்மலா சீதாராமன் பேச்சு

புதுடெல்லி , ஆக11-

"சிலப்பதிகார வழியில் பிரதமர் மோடி ஆட்சி நடத்துகிறார். சிலப்பதிகாரம் 'தமிழர்கள்' என்றுதான் சொல்கிறது. அதில் 'திராவிடர்கள்' என சொல்லப்படவில்லை" என்று திமுகவுக்கு பதிலளிக்கும் வகையில் மக்களவையில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த ஜூலை 20-ம் தேதி தொடங்கியது. மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடி அறிக்கை தாக்கல் செய்ய வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வந்தனர். இதற்கிடையே, மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணி சார்பில் மக்களவையில் நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் வழங்கினர்.

இந்த தீர்மானத்தின் மீதான விவாதம் செவ்வாய் தொடங்கியது. 2-ம் நாளாக நேற்றும் விவாதம் தொடர்ந்தது. இதில் காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, கம்யூனிஸ்ட், சமாஜ்வாதி, என்சிபி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பேசினர். இதற்கு பதில் அளித்து மத்திய அமைச்சர்கள், பாஜக எம்.பி.க்கள் பேசினர்.

இந்நிலையில், மக்களவையில் நேற்று நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 1 மணி நேரம் 14 நிமிடங்கள் பேசினார். அதில் மத்திய அரசின் சாதனைகள், பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கினார். குறிப்பாக, தமிழகத்தில் செயல்பாட்டில் உள்ள மத்திய அரசு திட்டங்கள் குறித்து விவரித்தார்.

மேலும், "அவையின் மூத்த உறுப்பினர், திமுக எம்.பி. டி.ஆர்.பாலு, மதுரை - எய்ம்ஸ் மருத்துவமனை குறித்து கேள்வி எழுப்பி இருந்தார். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும். 1,977 கோடி ரூபாயில் மத்திய அரசின் செலவில் கட்டப்படும். தமிழக அரசுக்கு இதனால் எந்தவித கடன் சுமையும் இல்லை. அதனால், அவை உறுப்பினர்கள் தவறான கருத்துகளைப் பரப்ப வேண்டாம். மொத்தம் 950 படுக்கை வசதி மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் அமைகிறது. ஆகையால், தமிழகம் இதில் கவலைகொள்ள வேண்டாம். இது, மத்திய அரசின் சுமை.

நாங்கள் மருத்துவமனை கட்டுவோம் என சொன்னதும், எப்போது என கேள்வி எழுப்புகிறார்கள். மதுரை - எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிலம் கையகப்படுத்துவதில் தாமதமானது. அதனால், மருத்துவமனைக் கட்டுமான பணி செலவும் கூடியது. இதற்கு மாநில அரசுதான் பொறுப்பு. இதற்கு கரோனா தொற்றுப் பரவலும் ஒரு காரணம்.

ஜல்லிக்கட்டு விளையாட்டின் மீதான தடை என்பது காங்கிரஸ் - திமுக கூட்டணி ஆட்சியில் அமலுக்கு வந்தது. அந்தத் தடையை நீக்கி தமிழ் பாரம்பரியத்தை காப்பாற்றியவர் பிரதமர் நரேந்திர மோடி.

சிலப்பதிகார வழியில் பிரதமர் மோடி ஆட்சி நடத்துகிறார். சிலப்பதிகாரம் தமிழர்கள் என்றுதான் சொல்கிறது. அதில் திராவிடர்கள் என சொல்லப்படவில்லை. செங்கோலை பிரதமர் மோடி மக்களவையில் வைத்தால், அதை ஏற்க முடியாது. 10-க்கும் மேற்பட்ட மேற்கோள்களை புறநானூறு மற்றும் திருக்குறளில் இருந்து பிரதமர் மோடி மேற்கோள் காட்டி பேசியுள்ளார். காசியில் தமிழ் சங்கமம் நடத்தப்பட்டுள்ளது" என்றார் நிர்மலா சீதாராமன்.

நிர்மலா சீதாராமன் பேசிக்கொண்டிருக்கும் போது, அவையிலிருந்து திமுக உறுப்பினர்கள் வெளியேறினர். அப்போது "ஏன் வெளியேறுகிறீர்கள். அப்படிச் சென்றால் எனது உரையை தொலைக்காட்சியில் பாருங்கள்" என்று அவர்களை நோக்கி நிர்மலா சீதாராமன் கூறினார்.

திருவொற்றியூர் மண்டல அலுவலகத்தில் மக்களை தேடி திட்டம்

# பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை மேயர் பிரியா பெற்றார்

திருவொற்றியூர் ,ஆக11-

சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து குறைகளை தீர்க்கும் வகையில் மக்களைத்தேடி மேயர் என்ற திட்டத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை பொதுமக்களை நேரடியாக சந்தித்து மனுக்களை பெற்று வருகிறார். இதுவரை ராயபுரம், திரு.வி.க.நகர், அடையாறு மண்டலத்தில் பொதுமக்களிடம் இருந்து மொத்தம் 889 மனுக்கள் பெறப்பட்டு அதில் 720 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இந்நிலையில் 4-வது முறையாக திருவொற்றியூர் மண்டல அலுவலகத்தில் மேயர் பிரியா பொது மக்களிடம் இருந்து மனுக்களை பெற்றார்.



மாற்றுத்திறனாளிகள் கோரிக்கை மனு அளிக்க வந்தபோது மேயர் பிரியா மேடையை விட்டு கீழே இறங்கி வந்து மனுக்களை பெற்றுக் கொண்டார். மேலும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் குறைகளை தீர்க்க உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் 3 பெண்களுக்கு தையல் எந்திரம், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பொருட்களை மேயர் பிரியா வழங்கினார். இதில் எம்.எல்.ஏ.க்கள் மாதவரம் சுதர்சனம் கே.பி.சங்கர், துணை மேயர் மகேஷ் குமார், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஓரவஞ்சனை செய்யாமல் தலித் கிறிஸ்தவர்களை எஸ்.சி பட்டியலில் சேர்க்க வேண்டும் திருமாவளவன்

சென்னை , ஆக11-

"சீக்கியம், பௌத்தம் ஆகிய மதங்களைத் தழுவியவர்களுக்குக் காட்டப்படும் பரிவு, கிறிஸ்தவத்தைத் தழுவிய பட்டியலினத் தவர்களுக்கும் காட்டப்பட வேண்டும். இதில் ஓரவஞ்சனை செய்வது கூடாது" என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கூறியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்து மதத்தைப் பின்பற்றும் பட்டியல் சமூகத்தினரை மட்டுமே அட்டவணை சாதிகளின் பட்டியலில் சேர்க்க வேண்டும் என 1950 ஆகஸ்டு 10-ம் நாள் குடியரசுத் தலைவரின் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனால் கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களைத் தழுவிய பட்டியலினத்தார் எஸ்.சி பட்டியலில் சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டனர். எனவே, அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க அந்நாளை தலித் கிறிஸ்தவர்கள் கறுப்பு நாளாகக் கடைபிடித்து வருகின்றனர். அவர்தம் நெடுநாளைய அறப் போராட்டம் வெற்றி பெற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மத்திய அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் அவர்களது நியாயமான கோரிக்கையை ஏற்று அவர்களை பட்டியலினத்தில் சேர்த்திட வேண்டும் என வலியுறுத்துகிறோம். இந்து மதத்தைப் பின்பற்றுவோரைத்தான் எஸ்.சி பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற குடியரசுத் தலைவரின் ஆணையில் 1956-ல் திருத்தம் கொண்டுவரப்பட்டு சீக்கிய மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோரையும் எஸ்.சி பட்டியலில் சேர்ப்பதற்கு வகைசெய்யப்பட்டது.

அடுத்து 1990-ம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தால் பௌத்த மதத்தைத் தழுவிய தாழ்த்தப்பட்டோரையும் எஸ்.சி பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. ஆனால், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களைத் தழுவிய மக்களை மட்டும் அப்பட்டியலில் சேர்க்கப்படாமல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.



இந்திய மத்திய அரசால் நியமிக்கப்பட்ட 'ரங்கநாத் மிஸ்ரா கமிஷன்' தலித் கிறிஸ்தவர்களை எஸ்.சி பட்டியலில் சேர்த்து இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என அறிக்கை அளித்து 16 ஆண்டுகள் ஆன பின்னரும் கூட இந்திய ஒன்றிய அரசாங்கம் அதன்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வேதனைக்குரியதாகும். பின்னர், 2022-ல் மேலும் இது குறித்து ஆய்வு செய்ய கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளுக்காக அலுவலக இடம் கொடுக்கப்பட்டதை தவிர வேறெந்த வசதிகளும் இன்னும் செய்துதரப்படவில்லை. தேவையான வசதிகள் செய்து தரப்பட்டால் இக்குழுவின் அறிக்கை அடுத்த ஆண்டு 2024-ல் சமர்ப்பிக்கப்படலாம் என அவர் தெரிவித்திருக்கிறார். தமிழக சட்டமன்றத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் முதல்வர் 'கிறிஸ்தவ மதத்தை பின்பற்றும் ஆதி திராவிட மக்களை எஸ்சி பட்டியலில் சேர்த்து அவர்களுக்கான உரிமைகளை வழங்கிட வேண்டும்' என தனித் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் மீதான நடவடிக்கைகளும் இன்னும் மத்திய அரசால் எடுக்கப்படவில்லை.

ஒருவர் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றுவதற்கு நமது அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு எண்-25இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களைத் தழுவிய தாழ்த்தப்பட்டோரை மட்டும் எஸ்.சி பட்டியலில் சேர்க்காமல் வஞ்சிப்பது அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமையை மறுப்பதாகும். இந்த அநீதியை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு கடந்த 13 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

பிறப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டும் இந்து மதத்தின் சாதி கோட்பாடு எல்லா மதங்களையும் தொற்றிப் பாழாக்கிவிட்டதால் எந்த மதத்தைத் தழுவினாலும் தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இந்த உண்மை ஆட்சியாளர்களுக்குத் தெரிந்திருந்தும் கூட தலித் கிறிஸ்தவர்களை எஸ்சி பட்டியலில் சேர்க்காமல் பாரபட்சம் காட்டுகின்றனர். இந்தப் போக்கு மாறவேண்டும்.

சீக்கியம், பௌத்தம் ஆகிய மதங்களைத் தழுவியவர்களுக்குக் காட்டப்படும் பரிவு கிறிஸ்தவத்தைத் தழுவிய பட்டியலினத் தவர்களுக்கும் காட்டப்படவேண்டும். இதில் ஓரவஞ்சனை செய்வது கூடாது என இந்திய அரசுக்கு சுட்டிக் காட்டுகிறோம்" என்று கூறியுள்ளார்.

# தொழிலாளியை கல்லால் தாக்கிய வாலிபர் கைது

ஆம்பூர் , ஆக11-

ஆம்பூரை அடுத்த வெங்கடா சமுத்திரம் கிராமத்தை சேர்ந்த வர்ரமேஷ் (வயது 40). கூலி வேலை செய்து வருகிறார். அதே பகுதியை சேர்ந்த அன்பரசன் (35) என்பவருக்கும், ரமேசுக்கும் இடையே ஆம்பூர் பைபாஸ் சாலையில் தகராறு ஏற்பட்டுள்ளது.



இதில் ஆத்திரம் அடைந்த அன்பரசன் அருகே இருந்த கல்லை எடுத்து ரமேசை தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காயம் அடைந்த அவரை அப்பகுதி மக்கள் மீட்டு சிகிச்சைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து ரமேஷ் ஆம்பூர் டவுன் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து அன்பரசனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பில் இருசக்கர வாகனம் ஓட்டுவோர் ஹெல்மெட் அணிய வேண்டும் என்றும் வாகனத்தில் பயணிக்கும் போது செல்போனில் பேசக்கூடாது என்றும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் பொதுமக்களுக்கு காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பில் ஏற்படுத்தி வரும் நிலையில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மனீஷ் தலைமையில் கொண்ட குழு இருசக்கர வாகனத்தில் பயணிப்போர் செல்போனில் பேசிக்கொண்டு சென்றதால் சம்பந்தப்பட்டவர்களை போட்டோ மற்றும் வீடியோ எடுத்து போக்குவரத்து காவல் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களுக்கு ஆதாரத்துடன் ஸ்பாட்பைன் உடனடியாக ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. இது மேலும் தொடரும் என்றும் பொதுமக்கள் இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் போது செல்போன் பேசுவதை தவிர்க்க வேண்டும் எனவும் அபராதத்தை தவிர்க்கும் படியும் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

# மயிலாடுதுறையில் திமுக அரசை கண்டித்து தேமுதிக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை, ஆக.11-

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தேமுதிக நிறுவன தலைவர் கேப்டன் விஜயகாந்த் மற்றும் தேமுதிக மாநில பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் அறிவுறுத்தலின்படி மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.ஜலபதி ஏற்பாட்டில், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டெல்லி சுவாமிநாதன் தலைமையில் மத்திய அரசு, திமுக அரசு, கர்நாடகா அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மத்திய பிஜேபி அரசு, கர்நாடகா காங்கிரஸ் அரசு, தமிழ்நாடு திமுக அரசை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட அவை தலைவரும் பரசலூர் ஒன்றிய கவுன்சிலருமான கே.எஸ் கிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் ராசி. மதிவாணன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் சாரங்கபாணி, ராஜகுமார், பாண்டியன், கனிமொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் திமுக தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி அனைத்து மகளிர்க்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிட வலியுறுத்தியும், கர்நாடகா அரசிடம் இருந்து தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய உரிய தண்ணீரை தமிழக அரசு பெற்று தர வேண்டும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும், மின் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும், தமிழகத்தில் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும், நெய்வேலி என் எல் சிக்கு விளைநிலங்களை கையகப்படுத்துவதை தடுத்து நிறுத்த வேண்டும் என தேமுதிக சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மற்றும் முன்னாள் மாவட்டத் துணைச் செயலாளர் ரவீந்திரன் மாநில செயற்குழு உறுப்பினர்கள் செல்வகுமார், திருஞானம் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் பண்ணை பாலு, அப்துல்முனாப், வைத்திலிங்கம், செல்வம் மாவட்ட மகளிர் அணி செயலாளர் கலைச்செல்வி மகளிரணி துணை செயலாளர்கள் பூங்கோதை, அஸ்மத் பஜானா, மல்லிகா, தமிழ்ச்செல்வி, மயிலாடுதுறை நகர கழக செயலாளர் எம். கலாநிதி, சீர்காழி நகர கழக செயலாளரும் நகர மன்ற உறுப்பினர் ராஜசேகர் ஒன்றிய கழக செயலாளர்கள் பாக்கம் சிவா, பிரபு, ராமகிருஷ்ணன், ஆல்பர்ட், தங்க தியாகராஜன், அகோரமூர்த்தி, ராஜாராமன், மோகன்ராஜ், அறிவுமணி, குத்தாலம் பேரூராட்சி செயலாளர் பாலா தரங்கை பேரூராட்சி செயலாளர் முத்தழகன் உள்ளிட்ட நகர ஒன்றிய பேரூராட்சி கழகத்தை சேர்ந்த நிர்வாகிகள் 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கோரிக்கை பதாகைகளை கையில் ஏந்தியபடி கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இறுதியாக மாவட்ட செயலாளர் எஸ்.ஆர் ஜலபதி தலைமையில் நிர்வாகிகள் மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலையிடம் கோரிக்கை மனு அளித்தனர். ஒன்றிய செயலாளர் பாக்கம் சிவா நன்றி கூறினார்.

# சங்கரன்கோவிலில் ஓடும் பேருந்தில் ஆசிரியரிடம் 11 பவுன் நகை திருட்டு: போலீசார் விசாரணை

சங்கரன்கோவில், ஆக. 11-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஐந்து வீட்டு லைன் தெருவை சேர்ந்தவர் நடராஜன் மனைவி துளசி மணி (55), துளசி மணி சங்கரன்கோவில் அருகே உள்ள அரசு உதவிபெறும் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். துளசி மணி காலை வேலைக்கு செல்வதற்காக சங்கரன்கோவில் பயணிகள் விடுதி முன்பு பேருந்தில் ஏறி உள்ளார். பஸ் சங்கரன்கோவில் என் ஜி ஓ காலனியில் வரும்போது கழுத்தில் கிடந்த 11 பவுன் தங்கச் செயின் காணாமல் போனதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதனுடைய மதிப்பு 3,75,000 ஆயிரம் ஆகும். இது குறித்து சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையத்தில் கொடுத்த புகார் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.




காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளான நெடுங்காடு வேளாண் உழவர் உதவியகம், நெடுங்காடு வேளாண் கூட்டுறவு விவசாயிகள் சங்கம், நெடுங்காடு சுகாதார நிலையம், நெடுங்காடு மின்துறை அலுவலகம், நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகம், நெடுங்காடு வருவாய்த்துறை அலுவலகம், வடகட்டளை தாய் சேய் நிலையம் நல்லாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம், குரும்பகரம் தாய் சேய் நிலையம், மேலகாசாக்குடி தாய் சேய் நிலையம், வடமட்டம் தாய் சேய் நிலையம், நெடுங்காடு காவல் நிலையம், நெடுங்காடு பொதுப்பணித்துறை அலுவலகம், மேலகாசாகுடி வேளாண் துறை உழவர் உதவியகம் உள்ளிட்ட 30 அரசு அலுவலகங்கள் மற்றும் சில அரசு பள்ளிகளுக்கு மாணவர்கள் பயன்படுத்தும் டேபிள் சேர் ஆகியவற்றை தனது சொந்த செலவில் 2.5 லட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் சிரமம் இல்லாமல் அலுவலுவதற்கு வந்தால் அமர்வதற்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திரபிரியங்கா (Steel Waiting Chair) வழங்கினார்கள். இந்நிகழ்வில் அரசு துறை அதிகாரிகளும் அலுவலக ஊழியர்களும் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சாலைகளை நம்பி மாடுகளை வளர்க்கும் மாடு உரிமையாளர்கள் மீது

# கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் எச்சரிக்கை



சென்னை, ஆக,11

அரும்பாக்கத்தில் நேற்று சம்பவத்தில் இரண்டு மாடுகளும் பிடிக்கப்பட்ட பெரம்பூரில் பசு காப்பகத்தில் வைக்கப்பட்டு கண்காணிப்பில் இருக்கிறது

15 வார்டுகளிலும் அனைத்து மண்டலங்களிலும் இந்த பணிகள் நடைபெறுகிறது. இன்று (நேற்று) தொடங்கப்பட்ட பணி அல்ல மாதத்தில் 500 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளது. 51 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் மாட்டு உரிமையாளர்கள் வசதி இல்லாமல் சாலைகளில் மாடுகளை விடுகிறார்கள் 36 சதுர அடி இடம் இருந்தால் மட்டுமே மாடுகள வளர்க்க வேண்டும் அது தெரியாமல் தெருவை நம்பி வளர்ப்பது தவறு இதுபோன்று தொடர்ந்தால் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே நேரத்தில் தற்பொழுது சட்டத்தில் இதை தடைவிதித்து நிறுத்துவதற்கு வழிவகைகள் இல்லை இதற்காக சட்ட திருத்தங்கள் தேவையா என்று ஆலோசித்து வருகிறோம்.

நகர்ப்புறம் முழுவதும் மாநகராட்சி பகுதிகளில் இடமே இல்லாமல் இருக்கிறது வாகனம் ஓட்டுவதற்கு அச்சுறுத்தல் இருக்கும் நிலையில் சிறுமிக்கு ஏற்பட்ட பாதிப்பு இனி நடக்கக் கூடாது என்பதற்குத்தான் மாநகராட்சி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்



பெண்கள் கல்வி சமூக அறக்கட்டளை தொண்டு நிறுவனம் சார்பாக நேற்று எம்.எம்.எச். நகரில் போக்குவரத்து துறை அமைச்சர் . சந்திர பிரியங்கா தலைமையில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலையில் பெண்கள் முன்னேற்றம் அடைவதற்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களை மதிப்பீடு செய்து விற்பனை செய்வது மேலும் காலையில் சிற்றுண்டியாக தயாரித்து விடுதி மற்றும் ஹோட்டல்களுககு விற்பனை செய்வது மகளிர் இது போன்ற செயல்களால் முன்னேறுவது சம்பந்தமான பயிற்சி வகுப்பு நடைபெற்றது. மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்த பயிற்சி வகுப்பில் முதற்கட்ட பயிற்சி வகுப்பை அமைச்சர் துவக்கி வைத்தார். இக்கூட்டத்தில் 30-க்கும் மேற்பட்ட மகளிர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். 15 நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சி முகாமில் இவர்களுக்கு தினமும் ஊக்கத்தை அளிக்கப்படும் எனவும் பயிற்சி முடித்து இவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவித்த போக்குவரத்து துறை அமைச்சர் இந்நிகழ்வை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். மேலும் இந்நிகழ்வில் பெண்கள் கல்வி சமூக அறக்கட்டளை தொண்டு நிறுவனத்தின் தலைவி பத்மினி சிபி வங்கியின் உதவி பொது மேலாளர் பாஸ்கரன் மீன்வளத்துறை அலுவலர் பாலாஜி உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.



சென்னை கொருக்குப்பேட்டை பாரதிநகரில்," பாரதி மக்கள் பொதுநல இயக்கம்" சார்பில் பத்தாம் வகுப்பு ,பனிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் எடுத்த 100 க்கும் மேற்பட்ட மாணவ- மாணவிகளுக்கு நினைவு பரிசு வழங்கும் விழா வருகின்ற ஞாயிறு அன்று மாலை நடைபெறும் கல்வி விருது வழங்கும் விழா நடைபெற உள்ளது. இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்ளும் தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல் ராஜ்,ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர்,மக்கள் நல மருத்துவர் கே.சரண்யாஜெயசந்திரன்,சென்னை 4 வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு கணேசன் ஆகியோருக்கு ,பாரதி மக்கள் பொதுநல இயக்கத்தின் நிர்வாகிகள் டி.சந்திரமோகன்,பெ.ராம்குமார், சா.இக்பால்,பி.எஸ்.வீரா,மு.குமரன்,சா,அசன் அலி ஆகியோர் நேரில் சென்று அழைப்பிதழ் கொடுத்த போது எடுத்த படம்.

## தலித் கிறிஸ்தவர் - இஸ்லாமியர் இட ஒதுக்கீட்டை மறுக்கும் ஜனாதிபதி ஆணையை

# உடனே நீக்கம் செய்ய வலியுறுத்தி மயிலாடுதுறையில் கருப்பு தின கண்டன ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை, ஆக. 11-

இந்தியா சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகளுக்கு மேலாகியும் மதத்தின் பெயரால் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் நிலையை கண்டித்தும், தலித் கிறிஸ்தவர்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்க வலியுறுத்தியும் மயிலாடுதுறையில் கருப்பு தின கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஞ்சை மறை மாவட்ட எஸ்சி, எஸ்டி பணிக்குழு சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மயிலாடுதுறை மறைவட்ட அதிபர் தார்சிஸ்ராஜ் அடிகளார் தலைமை வகித்தார். மயிலாடுதுறை மறைவட்ட தலைவர் ஜோசப் வரவேற்புரையாற்றினார். பங்கு தந்தையர்கள் மரியதாஸ், அருளானந்து, அமலதாஸ் ஜான், ஜெர்லின் கார்ட்டர், ஆனந்த், மைக்கேல் டைசன், ஜோ பிரான்சிஸ், பங்கிராஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் மறை வட்ட தலைவர் தலித்தாஸ், நெல்சன், வினோத் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

இதில், தலித் கிறிஸ்தவர், இஸ்லாமியர் இட ஒதுக்கீட்டை மறுக்கும் ஜனாதிபதி ஆணை 1950, பத்தி 3-ஐ உடனே நீக்கம் செய்ய வலியுறுத்தியும், மதத்தின் பெயரால் தலித் மக்களை பிரிக்கும் செயலை கண்டித்தும், நீதி அரசர் ரங்கநாத் மிஸ்ரா குழுவின் அறிக்கைப்படி தலித் கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் பரிந்துரையை உடனே செயல்படுத்த வலியுறுத்தியும், தலித் கிறிஸ்தவர்களை எஸ்சி பட்டியலில் சேர்க்க கோரி தமிழக அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை உடனே அமல்படுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன முழக்கமிட்டனர்.

இதில் மறை வட்ட நிர்வாகிகள் அமலதாஸ், பாஸ்கர், பிலமன்ராஜ், பீட்டர் தாஸ், எலிசபெத் ராணி, பரிமளதாஸ், சினேகா, அருட் சகோதரர்கள், அருட்சகோதரிகள், மற்றும் மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி, ஆத்துகுடி உள்ளிட்ட மயிலாடுதுறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான கிறிஸ்தவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சார்ந்த சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய கூட்டம்



**செம்பனார்கோயில், ஆக. 11-**

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியக்குழு சாதாரண கூட்டம் ஒன்றியக்குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது. ஒன்றியக்குழு துணை தலைவர் மைனர் பாஸ்கர், ஒன்றிய ஆணையர் மீனா, வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) விஜயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய மேலாளர் கோவிந்தராஜ் வரவேற்றார்.

கூட்டத்தில் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசியதாவது:- ரஜினி:- செம்பனார்கோயிலில் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் மேம்படுத்த வேண்டும். பாகசாலை, கொண்டத்தூர் பகுதியில் மயான சாலை அமைக்க வேண்டும். சேமங்கலம், எருமல், புதுப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாகசாலை ஊராட்சியில் பகுதிநேர அங்காடி கட்ட வேண்டும்.

மோகன்தாஸ்: செம்பனார்கோயிலில் கலைஞர் சிலை மற்றும் அவரது பெயரில் நூலகம் அமைக்க வேண்டும். கிடாரங்கொண்டான் ஊராட்சியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்கிற்கு செல்லும் சாலையை விரைந்து சீரமைத்து தர வேண்டும். பொதுமக்கள் அவசர சிகிச்சை பெற்று பயன்பெறும் வகையில் ஆக்கூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரத்தில் டாக்டர்களை நியமிக்க வேண்டும். ராஜ்கண்ணன்: மடப்புரம் ஊராட்சி மண்மலை கிராமத்தில் மயான கொட்டகையும், சவுரியாபுரம் கிராமத்தில் மயான சாலையும் அமைக்க வேண்டும்.

ஷகிலா அஜீஸ்: சங்கரன்பந்தல் கடைவீதியில் போக்குவரத்து இடையூராக உள்ள மீன் மார்க்கெட்டை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓலக்குடி கிராமத்தில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும். தேவிகா: புத்தகரத்தில் மயான சாலை மற்றும் தார் சாலை அமைத்து, அங்கு சேதமடைந்த பாலத்தை புதிதாக கட்டித் தர வேண்டும்.

முத்துலட்சுமி: ஆறுபாதி ஊராட்சியில் புதிதாக பகுதிநேர அங்காடி அமைக்க அனுமதி பெறப்பட்டும்,இதுவரை அமைக்கப்படவில்லை. அதனை பொதுமக்களின் நலன் கருதி விரைந்து கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செல்வம்: சந்திரபாடி ஊராட்சியில் பழுதடைந்த துணை சுகாதார நிலையத்தை புதிதாக கட்டித் தர வேண்டும். 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளை ஆய்வு செய்ய வேண்டும்.

லெனின்தாஸ்: டி.மணல்மேடு ஊராட்சி நட்சத்திரமாலை கிராமத்தில் சுடுகாடு அமைத்து தர வேண்டும். காழியப்பநல்லூர் ஊராட்சி செங்கமேடு இணைப்பு சாலை விரைந்து சீரமைக்க வேண்டும். துடரிபேட்டை கிராமத்தில் குடிநீர் குழாய் உடைப்பை சீர் செய்து தர வேண்டும்.

கிருபாவதி: கொத்தங்குடி ஊராட்சி பனங்குடி பயணிகள் நிழலகம் அருகில் சிமெண்ட் சாலையில் தண்ணீர் தேங்காத வகையில் சீரமைக்க வேண்டும். நல்லாடை ஊராட்சியில் ஈமக்கிரியை மண்டபம் புதிதாக கட்டித் தர வேண்டும். இதனை தொடர்ந்து ஒன்றியக்குழு தலைவர் பேசுகையில், தற்போது உறுப்பினர்கள் விடுத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாக உரிய பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். கூட்டத்தில் சுகாதார துறையினர் உள்பட அரசு அலுவலர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# திறக்காத அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் நடவடிக்கை எடுத்த மாவட்ட ஆட்சியர்



சீர்காழி, ஆக,11

மயிலாடுதுறை அருகே சேமங்கலம் கிராமத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படாததால் கொள்முதல் நிலையம் முன்பு நெல்லை கொட்டி வைத்து விவசாயிகள் காத்திருந்த செய்தி எதிரொலியாக, நெல் கொள்முதல் நிலையம் செயல்படும் என மாவட்ட ஆட்சியர் உறுதியளித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் நடப்பாண்டு நீரைக் கொண்டு பம்பு செட்டு பயன்படுத்தி சுமார் 90 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் அறுவடை பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் குறுவை சாகுபடி செய்த நெல்லை விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய கடந்த வாரம் குத்தாலம் தாலுக்கா மேக்கிரிமங்கலம் கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை திறந்து வைத்தார்.

அப்போது, மாவட்டம் முழுவதும் 119 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் எனவும் தெரிவித்தார். அதன்படி மாவட்டம் முழுவதும் படிப்படியாக நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியத்தில் உள்ள சேமங்கலம் கிராமத்தில் நிலத்தடி நீரைக்கொண்டு சுமார் 1,000 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், அருகாமையில் உள்ள கருவாழக்கரை, மருத்தூர் கிராமங்களில் சுமார் 500 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மொத்தமாக 1500 ஏக்கரில் அறுவடை செய்யப்பட்ட நிலையில், அந்த நெல் மணிகள் சேமங்கலம் திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையத்துக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. விவசாயிகள் ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45, கோ 51 ஆகிய சன்ன ரக நெல் மற்றும் ஏஎஸ்டி 16 மோட்டோ ரக நெல் ஆகியவற்றை சாகுபடி செய்துள்ளனர்.

இந்நிலையில், சேமங்கலம் கிராமத்தில் கடந்த 20 நாள்களில் சுமார் 20 சதவீத அறுவடைப் பணிகள் நிறைவடைந்து, விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த நெல்லை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் முன்பு கொட்டி வைத்து, கொள்முதல் நிலையம் திறப்பதற்காக காத்து கிடந்தனர்.

நெல் கொள்முதல் நிலையம் திறக்க காலதாமதம் ஆவதால் விவசாயிகள் பலர் தனியாரிடமும் தங்கள் நெல்லை குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலையும் நிலவியது, மேலும் தற்போது மாலை நேரங்களில் மழை பெய்து வருவதால், கொட்டி வைத்துள்ள நெல்லை இரவு நேரங்களில் தார்ப்பாய் கொண்டு மூடியும், பகல் நேரத்தில் வெயிலில் காயவைத்தும் நெல்லை பாதுகாக்க விவசாயிகள் கடுமையான போராடி வந்தனர். தற்போது, சுமார் 320 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் நிலையம் முன்பு கொட்டி வைக்கப்பட்டுள்ளது.

உடனடியாக கொள்முதல் நிலையத்தை திறந்தால்கூட ஏற்கெனவே கொட்டி வைக்கப்பட்டுள்ள நெல்லை கொள்முதல் செய்ய 10 நாட்கள் பிடிக்கும். இந்நிலையில், அறுவடைப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் வரும் நாட்களில் கூடுதல் நெல் விற்பனைக்காக கொண்டுவரப்படும் என்பதால் அரசு உடனடியாக நெல் கொள்முதல் நிலையத்தை திறக்க வேண்டும், அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல்லை உடனுக்குடன் கிடங்குக்கு கொண்டு சென்று விவசாயிகளை நஷடத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், விவசாயிகள் அரசின் கவனத்தை ஈர்க்கும் விதமாக நெல் கொள்முதல் நிலைமுன்பு முழக்கங்களை எழுப்பி கோரிக்கை வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இது குறித்து அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டுள்ளார். அப்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளரிடம் தர ஆய்வாளர்கள் தற்போது நெல் வரத்து இல்லை எனவும், நெல் வரத்து அதிகரிக்க இன்னும் இரண்டு வாரங்கள் ஆகும் என தவறாக தெரிவித்ததால் நெல் கொள்முதல் நிலையம் கொள்முதல் நிலையம் திறப்பதில் காலதாமதம் என தெரிவித்ததாகவும், இதனை தொடர்ந்து தவறான தகவல் அளித்த தர ஆய்வாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆட்சியர் உத்தரவிட்டு, உடனடியாக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.



நாட்டின் 76-வது சுதந்திரப் பெருவிழாவின் ஒரு பகுதியாக 'இல்லந்தோறும் தேசியக்கொடி'என்ற திட்டத்தின் அடிப்படையில் புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு தேசியக்கொடியினை பள்ளி முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி வழங்கினார்.

# அறந்தாங்கியில் 23–ம் ஆம் நாள் வீரசைவ ஜங்கம பண்டாரத்தார்கள் மண்டகப்படி



அறந்தாங்கி,ஆக.11-

அறந்தாங்கி வீரமாகாளியம்மன் திருக்கோயில் ஆடிப்பெருந்திருவிழாவை முன்னிட்டு அலங்கரிக்கப்பட்ட புஷ்ப பல்லாக்கில் அம்மன் வீதி உலா வந்த காட்சி பக்தர்களை பரவசப்படுத்தியது. புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் பிரசித்திபெற்ற வீரமாகாளியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் ஆடிப்பெருந்திருவிழா கடந்த மாதம் 18-ஆம் தேதி காப்பு கட்டுகளுடன் தொடங்கி விமர்ஜையாக நடைபெற்று வருகிறது.

30 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் 23-ஆம் மண்டகப்படி வீரசைவ ஜங்கம பண்டாரத்தார்கள் சமுதாயத்தினர் சார்பில் நடைபெற்ற விழாவை முன்னிட்டு அம்மன் வீதியுலா காட்சி மிக விமர்சியாக நடைபெற்றது. இதனை முன்னிட்டு வீரமாகாளியம்மனுக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டு பின்னர் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட புஷ்ப பல்லாக்கில் அம்மன் வீதியுலா நிகழ்ச்சி நடைபெற்றது.

நான்கு மாட வீதிகளிலும் வீதியுலா வந்த வீரமாகாளியம்மனை ஆயிரக்கணக்கான மக்கள் பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர். கண்ணை கவரும் வகையில் அலங்கரிக்கப்பட்டிருந்த புஷ்ப பல்லாக்கில் சாமி வீதி உலா வந்த காட்சியும் அப்போது நடத்தப்பட்ட கண்கவர் வானவர் வேடிக்கைகளும் பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.

# பொக்கிசக்காரன்பட்டி மலையாளகருப்பர் கோவிலில் விளக்கு பூஜை



ஆதனக்கோட்டை, ஆகஸ்ட்.11-

பொக்கிசக்காரன் பட்டி மலையாளகருப்பர் ஆலயத்தில் ஆடி நவமி கிருத்திகையை முன்னிட்டு விளக்கு பூஜை கோலாகலமாக நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை அருகே உள்ள அக்கச்சிப்பட்டி கிராமத்தில்அருள்பாலித்து வரும் மலையாள கருப்பர் ஆலயத்தில் ஆடி நடைபெற்ற விளக்கு பூஜையில் திரளான சுமங்கலி பெண்கள் விளக்கு பூஜையில் கலந்துகொண்டனர்.

கணபதி ஹோமம் லெட்சுமி ஹோமத்துடன் தொடங்கிய திருவிளக்கு பூஜையில் குங்குமத்தால் அர்ச்சனை செய்து விளக்கேற்றி விநாயகர் மந்திரம் சொல்லியும் 1008 விளக்கு போற்றி சொல்லியும் குடும்பத்தில் கஷ்டங்கள் நீங்கி நீண்ட ஆயுளோடு தம்பதிகளாக வாழவும் விவசாயம் செழிக்கவும் தங்களது வேண்டுதல் நிறைவேற விளக்கு பூஜையில் திரளான பெண்கள் கலந்துகொண்டு வழிபட்டனர். விளக்குப்பூஜைக்கான ஏற்பாடுகளை விசுவ இந்து பரிசத் மாவட்டச் செயலாளர் சுரேஷ் தலைமையிலான குழுவினர்செய்திருந்தனர்.



சென்னை இராயபுரம் மேற்கு பகுதி 48வது திமுக வட்டச் செயலாளர் இரா. பாலன் தனது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா. இளைய அருணாவை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துக்கள் பெற்றார்



சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பேராசிரியர் க. அன்பழகன் கல்வி வளாகத்திற்குள் நேற்று நடைபெற்ற பேராசிரியர் க. அன்பழகன் முழு உருவ வெண்கல சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா. சண்முகநாதன் நினைவுப் பரிசாக புத்தகம் அளித்து வரவேற்ற போது எடுத்த படம்.



அரியலூர் ஊராட்சி ஒன்றியம், மேல கருப்பூர் கிராமத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகளை, போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் தொடங்கி வைத்தார். அருகில் எம் எல் ஏ கு.சின்னப்பா, ஊராட்சி மன்றத் தலைவர் கோபி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# வறுமைக்கோட்டு பட்டியலில் உள்ள குளறுபடிகளைப் போக்குக: சிபிஎம் போராட்டம்



புதுக்கோட்டை, ஆக.11-

வறுமைக்கோட்டு பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரிசெய்ய வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வியாழக்கிழமை முற்றுகை மற்றும் மனுக்கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது.

தமிழக அரசு அறிவித்த கிராமப்புற ஏழை, எளிய மக்களை மேம்படுத்துவதற்காக வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களைப் பட்டியல் தயாரித்து வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார்கோவில் பகுதியில் இப்பட்டியல் தயாரிப்பதில் பல்வேறு குளறுபடிகளும், மோசடிகளும் நடைபெற்றுள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.எனவே, வறுமைக்கோடு பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரிசெய்யவும், தகுதியான நபர்களை பட்டியலில் சேர்க்கவும் வலியுறுத்தி குன்றாண்டார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு வியாழக்கிமை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனுக்கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்திற்கு கட்சியின் ஒன்றியச் செயலாளர் எஸ். கலைச்செல்வன் தலைமை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.ஸ்ரீதர் கண்டன உரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டக்குழு உறுப்பினர் கே.தங்கவேல், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் வி.பழனிச்சாமி, கே.பழனிவேல், எஸ். சாந்தா, பி.பெருமாள், எம்.சின்னத்துரை, எஸ். செல்வராஜ், எம்.மகாலெட்சுமி, ஏ.ஆறுமுகம், எஸ். சிவபெருமாள் உள்ளிட்டோர் பேசினர்.

போராட்டத்திற்குப் பிறகு குன்றாண்டார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் பேபி ராணியிடம் பொதுமக்கள் கொண்டுவந்த கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் அளிக்கப்பட்டது

## தென்காசியில் சார்பு அணி நிர்வாகிகள்

# ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் : எம்எல்ஏ ராஜா



சங்கரன்கோவில். ஆக.11-

தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் வடக்கு மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் மேலரதவீதியில் உள்ள கோகுலம் மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் பத்மநாதன் தலைமை வகித்தார். மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் வெற்றி விஜயன் வரவேற்றார், மாவட்ட பொருளாளர் சரவணன் தொகுத்து வழங்கினார்.

குருவிகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் கடற்கரை, வடக்கு மாவட்ட மகளிர் அணித் தலைவர் அன்புமணி கணேசன் ஆகியோர் சார்பு அணி நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினர், இதில் கலந்து கொண்ட தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ 20 சார்பு அணி நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி பேசினார்.

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் வெள்ளத்துரை, தேவா என்ற தேவதாஸ், பராசக்தி, வேல்சாமிபாண்டியன், மகேஸ்வரி ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், பெரியதுரை, ராமச்சந்திரன், மதிமாரிமுத்து, கிறிஸ்டோபர், சேர்மத்துரை, புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி, அவைத்தலைவர் வேல்சாமி பாண்டியன்,பேரூர் கழகச் செயலாளர்கள் குருசாமி ,ரூபி பாலசுப்பிரமணியன், மாரிமுத்து, நகராட்சி சேர்மன்கள் சங்கரன்கோவில் உமாமகேஸ்வரி சரவணன் , புளியங்குடி விஜயா சௌந்தரபாண்டியன் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்,வாசுதேவநல்லூர் சேர்மன் லாவண்யா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் தகவல் தொழில் நுட்ப அணி கிப்ட்சன் ராஜா, மகளிர் அணி சிவசங்கரி, மகளிர் தொண்டரணி விஜயா, கலை இலக்கிய பகுத்தறிவு அணி பிரேம்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு அணி கேஎஸ்எஸ் மாரியப்பன், தொண்டரணி அப்பாஸ் அலி, தொழிலாளர் அணி சரவணன், விளையாட்டு மேம்பாட்டு அணி காசிராஜன், நெசவாளர் அணி சந்திரன், பொறியாளர் அணி

பசுபதிபாண்டியன், சிறுபான்மையினர் அணி நாகூர் கனி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி முருகன், இலக்கிய அணி குருவசந்த், விவசாய தொழிலாளர் அணி சேதுராமன், மருத்துவர் அணி டாக்டர் மணிகண்டன், மீனவரணி சாமுவேல், விவசாய அணி மாடசாமி, அயலக நாட்டவர் அணி அமிதாப் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சரவணன், ராஜ் கார்த்தி, செய்யது இப்ராஹிம் என்ற அன்சாரி, ராஜராஜன், சுரேஷ், சேக் மைதீன், முருகேஷ், சுப்பு,பீர் ஒலி, மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், முடிவில் சங்கரன்கோவில் நகரச் செயலாளர் பிரகாஷ் நன்றி கூறினார்.

# பணியிட மாற்றம் செய்யப்பட்ட பெண் எஸ்.ஐ. சங்கீதா தற்கொலை முயற்சி மருத்துவமனையில் அனுமதி



*புதுக்கோட்டை*

*வழக்கறிஞர்கள் போராட்டத்தால் பணியிட மாற்றம் செய்யப்பட்டபெண்எஸ்ஐ அளவுக்கு அதிகமாகத் தூக்க மாத்திரைகள் தின்று ஆபத்தான நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.*

*புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் கீழ சவேரியார்பட்டினம் கிராமத்தைச்சேர்ந்தவர்கள் ஆரோக்கியராஜ் - ஜாஸ்மின் வித்யா தம்பதியினர். ஜாஸ்மின் வித்யா தனது கணவர் ஆரோக்கியராஜ் மீது சமூக நலத்துறை அலுவலகத்தில் வரதட்சணை புகார் கொடுத்திருந்தார். இது தொடர்பான விசாரணைக்காக ஜாஸ்மின் வித்யாவிற்காக வழக்கறிஞர் கலீல் ரகுமான் சமூக நலத்துறை அலுவலகம்சென்றுள்ளார்.*

*சமூக நலத்துறை அலுவலகத்தில் விசாரணை அதிகாரி, ஜாஸ்மின் வித்யாவின் வழக்கறிஞரான கலீல் ரகுமானை வெளியில் இருக்கச் சொல்லிவிட்டு புகார் குறித்து ஆரோக்கியராஜிடம் விசாரணை நடத்தினார். விசாரணை முடிந்து வெளியே வந்த ஆரோக்கியராஜ், வழக்கறிஞர் கலீல் ரகுமானை ஒருமையிலும் ஆபாசமாகவும் திட்டிவிட்டு அவரிடம் இருந்து செல்போனை பறித்துச் சென்றுள்ளார். இது தொடர்பாக கலீல் ரகுமான் திருக்கோகர்ணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார். அவர் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்து அவரது செல்போன் திருப்பி வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில் புகார் கொடுக்கச் சென்ற இடத்தில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சங்கீதா, தன்னை அவதூறாகப் பேசியதாக வழக்கறிஞர்கள் சங்கத்தில் கலீல் ரகுமான் முறையிட்டிருக்கிறார். இதன் காரணமாக கடந்த 2 நாட்களாக வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம், உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை முற்றுகையிடச்சென்றனர். அங்கு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட காவல் நிலைய எஸ்.ஐ சங்கீதாவை இடமாற்றம் செய்வதாக முடிவானது. அதன்படி திருக்கோகர்ணம் எஸ்.ஐ சங்கீதா ஆதனக்கோட்டை காவல் நிலையத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.*

*புதன்கிழமை காலை திருக்கோகர்ணம் காவல் நிலையம் சென்ற எஸ்.ஐ சங்கீதா, தனக்கு விடுப்பு வேண்டும் என்று கேட்டுள்ளார். ஆனால் அவருக்கு லீவு கிடைக்கவில்லை. லீவுக்காக கடிதம் எழுதி வைத்தவர் மன உளைச்சலுடன் மாலை வீட்டிற்குவந்து அதிகமான தூக்க மாத்திரைகளைத் தின்று மயங்கி இருக்கிறார். வெகு நேரமாக எழாத அவரை உறவினர்கள் பார்த்து தனியார் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் மாவட்ட காவல்த்துறை மற்றும் வழக்கறிஞர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

# திருமானூர் பகுதியில் ரூ.13.84 கோடி மதிப்பீட்டில் 44 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் போக்குவரத்துத் துறை அமைச்சர் துவக்கி வைத்தார்



அரியலூர், ஆக.11-

அரியலூர், திருமானூர் ஒன்றிய பகுதியில், ரூ. 13.84 கோடி மதிப்பீட்டில், 44 புதிய வளர்ச்சி திட்ட பணிகளை, போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் மற்றும் அரியலூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறை சார்பில், ரூ.13.84 கோடி மதிப்பீட்டில் 44 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகள் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது.

அதன்படி திருமானூர் ஒன்றியத்தில், சாத்தமங்கலம், வெற்றியூர், கல்லூர், குருவாடி, தூத்தூர், அரியலூர் ஒன்றியத்தில் ஆதனூர், சிலுப்பனூர், ஆண்டிபட்டாக்காடு, ஆலந்துறையார்கட்டளை ஆகிய ஊர்களில் சாலை மேம்பாட்டு திட்ட பணிகள், அரியலூர் ஊராட்சி ஒன்றியம் பொய்யூர் கிராமத்தில், நெடுஞ்சாலைத்துறை நபார்டு திட்டத்தின் கீழ், பொய்யூர்-செம்பந்தங்குடி சாலையை, 521 லட்சம் ரூபாய் மதிப்பில் தரம் உயர்த்துதல்.

திருமானூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கீழக்கொளத்தூர், திருமானூர், சுள்ளங்குடி, அரியலூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட சுண்டக்குடி, மேலக் கருப்பூர் ஆகிய ஊராட்சிகளில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகளை தொடங்கி வைத்தல்.

அரியலூர் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, பு. ஆதனூர் கிராமத்தில், ஒரு வகுப்பறை கொண்ட பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தது உட்பட, 13 கோடியே 84 லட்ச ரூபாய் மதிப்பில், 44 வளர்ச்சி திட்ட பணிகளை, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சா சி சிவசங்கர் துவக்கி வைத்து பேசினார்.

ஆங்காங்கு நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில், நபார்டு கோட்டப் பொறியாளர் வி.பி.சரவணன், உதவி பொறியாளர் பிரியதர்ஷினி, ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பிரபாகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமானூர் பொய்யாமொழி, அரியலூர் முத்துக்குமார், ஊராட்சி மன்றத் தலைவர்கள் வெற்றியூர் தவமணி சுப்பிரமணியன், கீழக்கொளத்தூர் செந்தமிழ்ச்செல்வி நெடுஞ்செழியன், திருமானூர் உத்ராபதி, காமரசவல்லி ஏலாக்குறிச்சி ஜெகதீசன், சுள்ளங்குடி நடராஜன், மேலக் கருப்பூர் கோபி, திமுக நிர்வாகிகள் சாத்தமங்கலம் காமராஜ், வெற்றியூர் முத்தையன், கல்லூர் கிருஷ்ணமூர்த்தி, புருஷோத்தமன், கீழக்கொளத்தூர் திருஞானசம்பந்த மூர்த்தி, காண்ட்ராக்டர்கள் விளாகம் பன்னீர்செல்வம், வைப்பூர் சிற்றரசு, ஒன்றிய கவுன்சிலர்கள் கண்ணே செல்வம், கோவிலூர் முத்தமிழ் செல்வன், திமுக ஒன்றிய செயலாளர்கள் அரியலூர் அன்பழகன், திருமானூர் கென்னடி, மதிமுக ஒன்றிய செயலாளர்கள் அரியலூர் சங்கர், திருமானூர் ரமேஷ், ஊராட்சி செயலாளர்கள் திருமானூர் சங்கர், கீழக்கொளத்தூர் ரமேஷ், காமராசவல்லி வெங்கடாஜலம், வெற்றியூர் காமராஜ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கறம்பக்குடி அருகே குடிநீர் கேட்டு சாலைமறியல் போராட்டம்



கறம்பக்குடி,ஆக .11-

கறம்பக்குடி அருகே துவார் ஊராட்சியில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக குடிநீர் பிரச்சனை இருந்து வருவதாகவும் அதனை சரி செய்து தரக்கோரி பெண்கள் காலி குடங்களுடன் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே துவார் பகுதியில் 500கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் அந்த பகுதியில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக குடிநீர் பிரச்சனை இருந்து வருவதாகவும், இது சம்பந்தமாக ஊராட்சி மன்றத் தலைவரிடம் கோரிக்கை வைத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது. பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்கள் பெரும் சிரமம் அடைந்து வருவதாகவும் குடிநீர் பிரச்சனையால் தாங்கள் வேலைக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குடிநீர் எடுக்க 3கிலோமீட்டர் தொலைவிலுள்ள விவசாய கிணற்றில் குடிநீர் எடுத்து வருவதாகவும் இருப்பினும் அந்த கிணற்றின் உரிமையாளர் குடிநீர் எடுக்க தடை விதித்து வருவதாகவும் தாங்கள் குடிநீரின்றி தவித்து வருவதாகவும் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

மேலும் தங்களுக்கு குடிநீர் வசதி வேண்டி கறம்பக்குடி புதுக்கோட்டை சாலை துவார் பேருந்து நிறுத்தம் முன்பு 100கும் மேற்பட்ட பெண்கள் காலி குடங்களுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் மழையூர் காவல் உதவி ஆய்வாளர் சாமிக்கண்ணு பேச்சுவார்த்தை நடத்தினார், இதில் குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியததையடுத்து சாலை மறியலை கைவிட்டு பொதுமக்கள் கலைந்து சென்றனர், இந்த சாலை மறியல் போராட்டத்தினால் புதுக்கோட்டை கறம்பக்குடி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# அடுத்த தேர்தலிலும் மக்கள் உங்களை தூங்கவிடப் போவதில்லை: பிரதமர்

# மேலாண்மை வாரியம் அமைக்க ரகுபதி போராட்டம் வழக்கை ரத்து செய்தது உயர் நீதிமன்றம்





# புதுக்கோட்டை: பணியிட மாற்றம் செய்யப்பட்ட எஸ்ஐ தற்கொலை முயற்சி


சென்னை / புதுக்கோட்டை | 11.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

11.08.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மைசூர் வீ. துரைசுவாமி ஐயங்கார் , வீணை இசைக்கலைஞர் (பி.1920) (இ.1997)



ஜான் ஆபிரகாம் , திரைப்பட இயக்குநர் (பி.1937) (இ.1987)



கி. லோகநாதன் , மலேசியத் தமிழறிஞர் (பி.1940) (இ.2015)



பெர்வேஸ் முஷாரஃப் , பாக்கித்தானின் 10வது அரசுத்தலைவர் (பி.1943)



## இன்றைய நினைவு நாள்

குதிராம் போஸ் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1889) (இ.1908)



சி. வி. ராஜசுந்தரம் , இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் (பி.1927) (இ.2011)



ப. கிருட்டிணமூர்த்தி , இந்திய மொழியியலாளர் (பி.1928) (இ.2012)

